

# உஷ்ஷ்ஷ் !

## புறங்கூறாதே!

ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**
ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு
விநியோகிக்கப்பட்டது, பெங்களூர், இந்தியா.
தற்போதைய பதிப்பு: 2023

**தகவல் தொடர்புக்கு**
All Peoples Church & World Outreach,
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: **bookrequest@apcwo.org**
Website: **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. 1982ல் தாமஸ் நெல்சன் Inc., என்பவரால் © காப்புரிமை பெறப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**
ஆல் பீப்பிள் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**
**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil - Shh... No Gossip)

# உஷ்ஷ்ஷ் !

புறங்கூறாதே!

# பொருளடக்கம்


1. புறங்கூறுதல் 1

2. புறங்கூறுதல் நடக்கும் பொதுவான சூழ்நிலைகள் 7

3. புறங்கூறுதலின் எதிர்மறையான விளைவுகள் 14

4. புறங்கூறுதலுக்கு எதிரான தேவனுடைய தீவிர நிலைப்பாடு 19

5. புறங்கூறுதலை எப்படிக் கையாளுகிறீர்கள்? 22

6. ஜெபம் 26

# 1
# புறங்கூறுதல்

வேதாகமத்தில் தாவீதின் சங்கீதங்களில் ஒன்றான 15 ஆம் சங்கீதம் அவருடைய பிரசன்னத்தில் வாசம்பண்ணுபவர்களும் அவரை ஆராதிப்பவர்களுமாய் இருப்பவர்களால் மட்டுமே தேவனுடன் தொடர்புகொள்ள முடியும் என்று விவரிக்கிறது.

**சங்கீதம்** 15:1-5

[1] **கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?**

[2] **உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே.**

[3] **அவன் தன் நாவினால் புறங்கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக்காமலும் இருக்கிறான்.**

[4] **ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன், கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான், ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.**

[5] **தன் பணத்தை வட்டிக்குக்கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.**

இந்த சங்கீதத்தில் இப்படிப்பட்ட ஒரு நபரின் பல குணாதிசயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டாலும், நாம் 3வது வசனத்தில் கவனம் செலுத்துவோம்.

**சங்கீதம்** 15:3 (TOV)

**புறங்கூறாமல் இருப்பவர்கள் அல்லது தங்கள் தோழனுக்குத் தீங்குசெய்யாதவர்கள், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை பேசாமல் இருப்பவர்கள்.**

புறங்கூறுதல், வதந்திகளைப் பரப்புதல் மற்றும் பிறரைப் பற்றித் தீமையாகப் பேசுதல் போன்ற பாவங்களை நாம் பெரும்பாலும் இலகுவாக எடுத்துக்கொள்கிறோம், ஆனால் இவை தேவனுடனான நமது உறவைப் பாதிக்கின்றன. இந்தப் பாவங்கள் தேவனுடன் நாம் ஐக்கியங்கொள்வதற்கும் அவரை ஆராதிப்பதற்கும் அவருடைய பிரசன்னத்தின் அனுபவத்தைப் பெறுவதற்கும் தடையாக இருக்கின்றன.

## புறங்கூறுதல் என்றால் என்ன

"புறங்கூறுதல்" என்பதன் சொல் அகராதி வரையறையானது, "பொதுவாக உண்மை என உறுதி செய்யப்படாத விவரங்களுடன் தொடர்புடைய பேச்சுகளான தற்செயலான அல்லது கட்டுப்பாடற்ற உரையாடல் அல்லது மற்றவர்களைப் பற்றிய அறிக்கைகள்" என்று வரையறுக்கப்படுகிறது. (ஆக்ஸ்போர்டு அட்வான்ஸ்டு லர்னர்ஸ் டிக்ஸ்னரி). பொதுவாக புறங்கூறுதல் என்பது, வீண் பேச்சாகவோ அல்லது வதந்தியாகவோ, குறிப்பாக அடுத்தவர்களின் தனிப்பட்ட அல்லது அவர்களின் சொந்த விவகாரங்களைப் பற்றியதாகவோ இருக்கிறது. இது ஜனங்களைப் பற்றிய தவறான தகவல்களைப் பரப்புவதாகும்.

இந்தப் புத்தகத்தில், நாம் பின்வரும் சொற்களை மாறி மாறிப் பயன்படுத்துவோம்—புறங்கூறுதல், புறணிபேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல், கிசுகிசுப்பவர், கேலி பேசுபவர்- இருப்பினும், ஒவ்வொன்றின் அர்த்தத்திலும் குறிப்பிடத்தக்க சில வேறுபாடுகள் உள்ளன. என்.கே.ஜெ.வி ஆங்கில வேதாகமம் புறங்கூறுபவர், புறணிபேசுபவர் அல்லது அவதூறு செய்பவர்க்கு "கோள் சொல்பவர்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. நமது புரிதலுக்காக, அவற்றை மாறி மாறிப் பயன்படுத்தினாலும், அவற்றில் சிலவற்றை சுருக்கமாக வரையறுப்போம்.

- ***புறணிபேசுதல்*** என்பது அப்போது அவ்விடத்தில் இல்லாத ஒருவரைப் பற்றிய தீங்கிழைக்கும் பேச்சு; ஒருவருக்கான தற்காப்பு வாய்ப்பைக் கொடுக்காமல் அவர்களின் நற்பெயருக்குத் தீங்கு விளைவிப்பதாகும். இது, அந்த வார்த்தையைச் சித்தரிப்பதுபோல், அவர்களின் முதுகுக்குப் பின்னால் "கடித்தல்" என்பதைக் குறிக்கிறது.

- ***முதுகில் குத்துதல்*** என்பது ஒருவருடன் நட்பாக இருப்பதுபோல் நடித்துக்கொண்டே, துரோகம் செய்யும் விதத்தில் அவரை விமர்சிப்பதாகும்.

- ***அவதூறு செய்தல்*** என்பது ஒருவரைப் பற்றிய தவறான, எதிர்மறையான, தீங்கிழைக்கிற மற்றும் நற்பெயரைக் கெடுக்கிற அறிக்கையையோ அல்லது தகவலையோ வெளியிடுவதாகும்.

- ***கோள்மூட்டுபவர்*** (கோள் சொல்லுபவர்) என்பது பொதுவாக சிக்கலைத் தீர்ப்பதற்காக அல்லாமல், மற்றவர்களை சிக்கலில் சிக்க வைக்கும் நோக்கத்துடன், அவர்களின் தவறுகளை ஒரு அதிகாரியிடம் புகாரளிப்பவர் ஆவார்.

பழைய ஏற்பாட்டில், தேவன் தம்முடைய ஜனங்கள் மத்தியில் சமூக வாழ்க்கையைப் பற்றிய அறிவுரைகளை வழங்குகையில் இவ்வாறு அவர் கூறினார்,

**யாத்திராகமம்** 23:1
**அபாண்டமான சொல்லை ஏற்றுக்கொள்ளாயாக. கொடுமையுள்ள சாட்சிக்காரனாயிருக்க ஆகாதவனோடே கலவாயாக.**

**லேவியராகமம்** 19:16
**உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள்சொல்லித் திரியாயாக, பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்படவேண்டாம், நான் கர்த்தர்.**

துரதிர்ஷ்டவசமாக, அநேகர் புறங்கூறுதல் அல்லது கோள் சொல்லுதலை ரசிக்கிறார்கள், ஆகவே அதில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். புறங்கூறுதல்கள் சிலருக்கு "முதல்தரமான உணவு" போன்றது. புறங்கூறுதலில் ஈடுபடுவதிலும் மற்றவர்களைப் பற்றிப் பேசுவதிலும் அவர்கள் சந்தோஷப்படுவார்கள். புறங்கூறுதலில் ஒரு மணிநேரம் செலவழித்த பிறகு தாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக உணர்கிறார்கள். வதந்திகள் ஒரு நபரின் இருதயத்திற்குள் ஊடுருவிச் செல்லும். இது ஒன்றுமில்லாத ஒரு சாதாரணமான சந்தோஷத்திற்கான பேச்சுதான் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் புறங்கூறுதலின் வார்த்தைகள் ஜனங்களைப் பாதிக்கிறது.

**நீதிமொழிகள்** 18:8 **(நீதிமொழிகள்** 26:22**ல் சொல்லப்பட்டுள்ளதை போல)**

**கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டுப்போலிருக்கும், ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும்.**

## எது புறங்கூறுதலாகக் கருதப்படாது

நாம் மற்றவர்களைப் பற்றியும், அவர்களின் பலம், பலவீனங்கள் மற்றும் அவர்களின் தோல்விகளை மதிப்பிடுதல் போன்றவற்றைப் பற்றியும் பேச வேண்டிய நேரங்கள் காணப்படுகின்றன. இருப்பினும், ஒரு நல்ல நோக்கத்திற்காகவும், தீங்கிழைக்கும் விதத்தில் இல்லாமலும் பேசப்படும்போது, இவை புறங்கூறுதலாகக் கருதப்படாது. சில உதாரணங்களைப் பார்ப்போம்.

### *யாரையும் இழிவுபடுத்தாத பொதுவான பேச்சு பேசுதல் / தகவலைப் பகிர்தல்*

உதாரணமாக, ஒருவரைச் சந்தித்ததைப் பற்றிய உங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் மற்றும் உங்கள் நேரத்தைச் சிறப்பாகச் செலவழித்தீர்களா, சந்திப்பின் முடிவு சாதகமாக இருந்ததா அல்லது எதிர்மறையாக இருந்ததா என்பவைகளைப் பற்றியும் மற்றும் அது தொடர்பான பிற விஷயங்களைப் பற்றியும் விவாதிக்கலாம். இதுபோன்ற சூழ்நிலைகளில், யாரையும் இழிவுபடுத்தும் நோக்கமின்றி உங்கள் நேர்மையான மதிப்பீட்டை வழங்குங்கள்.

### *மற்றவர்கள் என்ன சொன்னார்கள் அல்லது என்ன செய்தார்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட அனுபவத்தைப் பகிர்தல்*

இங்கே, மீண்டும் நீங்கள் விவரங்களைப் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எந்தத் தீங்கும் விளைவியாதபடிக்கு நீங்கள் இதைச் செய்ய வேண்டும்.

### *ஒரு அனுபவம் பற்றிய தொழில்ரீதியிலான மதிப்பீடு அல்லது ஒரு தனிநபர் அல்லது சூழ்நிலையைப் பற்றிய மதிப்பீடு*

பணியிட சூழ்நிலைகளில் இது வழக்கமாக நிகழ்கிறது, உதாரணத்திற்கு, நீங்கள் ஒரு நபரின் நேர்காணலைப் பற்றிய அறிக்கையை வழங்கும்போதும், செயல்திறன் மதிப்பீடுகளைச் செய்யும்போதும், ஒரு கடினமான சூழ்நிலையைச் சரிசெய்யும்போதும் இது நிகழ்கிறது. இந்தச் சூழல்களில், ஒரு துல்லியமான பார்வையை முன்வைக்க அவர்களின் பலம் மற்றும் பலவீனங்கள், நன்மை மற்றும் தீமைகளைப் பற்றி நீங்கள் நேர்மையாக விவாதிக்க வேண்டும்.

### *ஒரு காரியத்தை சரிசெய்ய முயற்சித்தல்*

முரண்பாடுகள் அல்லது சில சிக்கல்கள் உள்ள சூழ்நிலைகளில், நியாயமான முடிவுகளை அல்லது அடுத்த நடவடிக்கைக்கான தீர்மானங்களை எடுப்பதற்காக நடந்த நிகழ்வுகள் மற்றும் காரியங்களை நாம் மதிப்பாய்வு செய்வோம். இதோ, நாம் என்ன செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்கு

அறிவுறுத்துகிறது: *“உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக”* (மத்தேயு 18:15-17).

## தவறு செய்தல் அல்லது ஒழுக்கத்தில் தவறுதல் இருக்கும் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசும்போது

இதுபோன்ற சூழ்நிலைகளில், சம்பந்தப்பட்ட அனைவருடனும் நாம் விஷயங்களைப் பற்றிப் பேசி, தவறு செய்ததைப் பற்றிப் பேச வேண்டும் மற்றும் சரிசெய்தல் மற்றும் மறுபடியும் புதுப்பிக்கப்படுதலை நோக்கி செயல்பட வேண்டும். செய்த தவறை நாம் மறைக்க முயற்சிக்கவில்லை, ஆனால் கலாத்தியர் 6:1ல், *“சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு”* என்று அறிவுறுத்தப்பட்டபடி நாம் விஷயத்தை செய்கிறோம். யாக்கோபு 5:16ல், *“நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது”* என்று அறிவுறுத்தப்பட்டபடி, பாவத்தையும் செய்த தவறையும் அறிக்கையிட்டு மனந்திரும்ப வேண்டியது அவசியமாகும்.

## ஜனங்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாது என்பதற்காக தவறுகளை அம்பலப்படுத்தும்போது

சில நேரங்களில் நாம் வருந்தத்தக்க விஷயங்களைப் பகிரங்கமாகப் பேச வேண்டியிருக்கும் மற்றும் தவறுகளையும் தவறு

செய்பவர்களையும்அம்பலப்படுத்தவேண்டியிருக்கும். மற்றவர்கள் தீங்கிலிருந்தும் ஆபத்திலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்களை எச்சரிக்கும் மற்றும் பாதுகாக்கும் நோக்கத்துடன் நாம் இதைச் செய்கிறோம். தவறு செய்தவர்கள் மீதான இரக்கம் மற்றும் மனதுருக்கத்தால் நம் இருதயங்கள் நிரம்பியிருந்தாலும், மற்றவர்களின் பெரிதான நன்மைக்காக அவர்களின் தவறுகளை நாம் அம்பலப்படுத்துகிறோம். *"கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்"* (எபேசியர் 5:11). *"மற்றவர்களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்"* (1 தீமோத்தேயு 5:20).

*"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ள வேண்டும்"* (எபேசியர் 4:15) என்பதே மேற்கூறிய எல்லாச் சூழ்நிலைகளுக்கும் அடிப்படைக் கோட்பாடாகும்.

## சிந்தனைக்கு

1) எனது உரையாடல்களை நான் கவனமாக ஆராய்ந்து பார்த்தால், நான் எத்தனை முறை புறங்கூறியிருக்கிறேன், மற்றவர்களைப் பற்றித் தவறாகப் பேசியிருக்கிறேன்?

☐ மிகவும் அடிக்கடி ☐ அடிக்கடி ☐ சில நேரங்களில் ☐ எப்போதாவது

2) புறங்கூறுதலை நிறுத்தவோ அல்லது அதைக் கேட்காமல் விலகிச் செல்லவோ முயற்சிக்காமல், மற்றவர்களைப் பற்றி ஜனங்கள் புறங்கூறுவதை நான் எத்தனை முறை ரசித்திருக்கிறேன்?

☐ மிகவும் அடிக்கடி ☐ அடிக்கடி ☐ சில நேரங்களில் ☐ எப்போதாவது

# 2
# புறங்கூறுதல் நடக்கும் பொதுவான சூழ்நிலைகள்

நாம் புறங்கூறுதலை எதிர்கொள்ளும் சில பொதுவான சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்வோம்.

### சமூக வதந்திகள்

பொதுவாக, பல்வேறு காரணங்களுக்காக ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள சமூகத்தில், ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசும்போது "செய்திகள்" பரவுகின்றன. குடியிருப்பு சமுதாயங்கள், சமூகவியல் சமுதாயங்கள் மற்றும் பல சமுதாயங்கள் நமக்கு உள்ளன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினாலும் ஐக்கியத்தினாலும் அநேகர் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள ஒரு சமூகம் உள்ளூர் திருச்சபையாகும்.

எந்தவொரு சமூகத்திலும், ஒருவருக்கொருவர் தங்களைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துகொள்வார்கள் மற்றும் அவ்வாறு பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கும். இது முக்கியமானது மற்றும் அதனால் பயன் உண்டு.

உதாரணமாக,

**ரோமர்** 12:15
**சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள், அழுகிறவர்களுடனே அழுங்கள்.**

1 **கொரிந்தியர்** 12:26

**ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்.**

என்று உள்ளூர் திருச்சபை சமூகத்தைப் பற்றி, வேதாகமம் நமக்குச் சொல்கிறது.

இது சாத்தியமாக வேண்டுமானால், ஒருவருக்கொருவர் நல்லதோ கெட்டதோ, நம் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படியானால், நாம் களிகூருகிறோம், அழுகிறோம், துன்பப்படுகிறோம், ஒருவரையொருவர் கனம்பண்ணுகிறோம், இவைகளில் நாம் ஒன்றாகப் பயணிக்கிறோம். நம் வாழ்க்கையை நாம் ஒன்றாகப் பகிர்ந்துகொள்கிறோம். இருப்பினும், இதுபோன்ற செய்திகளைப் பகிர்ந்துகொள்ளும்போது, புறங்கூறுதல், புறணிபேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல் அல்லது கோள் சொல்லுதல் ஆகியவற்றில் ஈடுபடாமல் ஒருவரை ஒருவர் கனம்பண்ணுகிற விதத்தில் பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும்.

சுவாரஸ்யமாக, ஒரு உள்ளூர் திருச்சபை அல்லது விசுவாசிகளின் உள்ளூர் சமூகத்துடன் தொடர்புபடுத்திப் பேசப்படும் வதந்திகளையும் வீண் பேச்சுக்களையும் பற்றிய பிரச்சினையை நாம் பல நிருபங்களில் காண்கிறோம்.

கொரிந்து திருச்சபைக்கு எழுதும்போது, பவுல் ஒழுக்கக்கேட்டைப் பற்றிய பிரச்சனையை எடுத்துரைத்து, சபைக்கு மனந்திரும்பும்படி அழைப்பு விடுத்தான், ஏனெனில், அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களைச் சந்திக்கும்போது, "புறணி பேசுதல்கள், கிசுகிசுப்புகள்" போன்றவற்றில் ஈடுபட்டிருக்கும் நபர்களைக் காண வேண்டி இருக்குமோ என்று மிகவும் கவலைப்பட்டான்.

2 **கொரிந்தியர்** 12:20

**ஆகிலும் நான் வந்து, உங்களை என் மனதின்படியிருக்கிறவர்களாகக் காணமலும், நானும் உங்கள் மனதின்படியிருக்கிறவனாகக் காணப்படாமலுமிருப்பேனோவென்றும், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், வாக்குவாதங்கள், புறங்கூறுதல், கோள்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள் ஆகிய இவைகள் உங்களுக்குள்ளே உண்டாயிருக்குமோவென்றும்,**

எபேசுவில் உள்ள திருச்சபையைக் கண்காணிக்கும் தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுகையில், இளம் விதவைகளைப் பற்றி அவன் குறிப்பிடுகிறான், இது பொதுவாக அனைவருக்கும் பொருந்தும், அவர்கள் வேலையின்றி இருக்கும்போது, புறங்கூறவும், மற்றவர்களின் விஷயத்தில் தலையிடவும், அவர்கள் பேசக் கூடாத விஷயங்களைப் பற்றிப் பேசவும் ஆரம்பிக்கிறார்கள்.

1 **தீமோத்தேயு** 5:13
**அதுவுமல்லாமல், அவர்கள் சோம்பலுள்ளவர்களாய், வீடுவீடாய்த் திரியப்பழகுவார்கள். சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல, அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்.**

அதேபோல, தெசலோனிக்கேயர்களுக்கு எழுதிய நிருபத்தில், குற்றம் கண்டுபிடிப்பதில் மும்முரமாக இருப்பவர்களையும், மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுபவர்களையும் பவுல் கண்டிக்கிறான். இதில் ஒரு பகுதியாக மற்றவர்களைப் பற்றிய புறங்கூறுதல் மற்றும் வீண் பேச்சு ஆகியவையும் உள்ளடங்கும். அத்தகையவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று பவுல் கட்டளையிடுகிறான்.

2 **தெசலோனிக்கேயர்** 3: 11,12
[11] **உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய், ஒழுங்கற்று திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.**
[12] **இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்.**

உள்ளூர் திருச்சபைச் சமூகங்களில், புறணிபேசுதல் ஆவிக்குரிய வழிகளில் நடப்பதாகக் கருதப்படுகிறது. சபை உறுப்பினர்கள் மற்றும் திருச்சபைத் தலைவர்கள் (அதாவது, போதகர்கள் ஆகியோர்) புறங்கூறுவதிலும் வதந்திகளைப் பரப்புவதிலும் ஈடுபடுகின்றனர்.

உள்ளூர் திருச்சபை சமூகங்களிடையே வதந்திகள் பரவுவதற்கான சில பொதுவான வழிகள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

## *ஜெப விண்ணப்பங்கள்*

பொதுவாக, "நாம் உண்மையிலேயே அந்த நபருக்காக ஜெபிக்க வேண்டும்" என்ற இது போன்ற ஆவிக்குரிய அறிக்கையிலிருந்து உரையாடல் தொடங்குகிறது. மீதமுள்ள உரையாடல் அந்த நபரைப் பற்றிய மோசமான விஷயங்களையும் வதந்திகளையும் பேசுவதாய் இருக்கும், மேலும் இவை அனைத்தையும் பேசி முடித்த பின்பு, "இதற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்" என்ற கூற்றுடன் உரையாடல்

முடிவடைகிறது. உண்மையில் இது வதந்திகள் என்பதை மறைக்க இந்த ஜெப விண்ணப்பம் என்ற முகமூடியை நாம் பயன்படுத்துகிறோம். இப்படிச் செய்வதை நாம் நிறுத்த வேண்டும். இதிலிருந்து விலகி இருப்பதை நாம் தெரிந்துகொள்வோம்.

## *மேய்ப்பர் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்*

போதகர்கள் மற்றும் ஆவிக்குரிய தலைவர்களான நம்மிடம் ஜனங்கள் ஆவிக்குரிய உதவியை நாடி வருகிறார்கள். அவ்வாறு வரும்போது, பெரும்பாலும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளாத பல விஷயங்களான அவர்களது சொந்தப் போராட்டங்கள், தோல்விகள் மற்றும் பிற விஷயங்களைப் பகிர்ந்துகொள்கிறார்கள். அவர்கள் இதை நம் மீது வைத்திருக்கிற நம்பிக்கையினால் பகிர்ந்துகொள்கிறார்கள். இருப்பினும், பல போதகர்களும் ஆவிக்குரிய தலைவர்களும் இந்த நம்பிக்கையை உடைத்து, அவர்களது தனிப்பட்ட தகவல்களை தங்களது சாதாரண உரையாடலில் மற்றவர்களுக்கு வெளிப்படுத்தியதன் மூலம் குற்றவாளிகளாய் இருக்கிறார்கள். இதை ஆவிக்குரிய தலைவரே செய்தாலும், இது புறங்கூறுதலே அன்றி வேறில்லை! இது நிறுத்தப்பட வேண்டும்! நம்பிக்கையினால் பகிரப்பட்டவை நம்பிக்கையினால் பாதுகாக்கப்பட வேண்டும்.

## *ஒருவரின் நிழலில் பயனடைவதற்கான தோழமை*

ஜனங்கள் சில நேரங்களில், போதகர்கள் மற்றும் ஆவிக்குரிய தலைவர்கள் போன்றவர்களிடம் மிகவும் நெருக்கமாகப் பழகுவதாக மற்றவர்களிடம் காட்டிக்கொள்ள முயற்சிப்பதன் மூலம், அவர்கள் அதிக வெற்றியை அடைந்தவர்களின் நிழலில் பலனடைய விரும்புகிறார்கள். அந்த நபரைப் பற்றியதும் அவருக்கு மட்டுமே சொந்தமானதும் தனிப்பட்டதுமான சில தகவல்களைத் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் அவர்கள் இதைச் செய்கிறார்கள். நிச்சயமாக, மற்றவர்கள் அதினால் ஈர்க்கப்பட்டு, அத்தகைய ரகசிய தகவல்களை அறிந்திருக்கும் இவர் அந்த மூத்த போதகர் அல்லது தலைவருடன் உண்மையிலேயே நெருக்கமான நபராக இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இது புறங்கூறுதலே அன்றி வேறல்ல. நீங்கள் உண்மையிலேயே உண்மையான நண்பராக இருந்தால், உங்கள் மூத்த போதகர் அல்லது தலைவருடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தால், நீங்கள் அவருடைய சாதனைகளால் பயனடைய விரும்பமாட்டீர்கள். அவருக்குக்

கிடைக்கும் கனத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள கடன் வாங்க விரும்பமாட்டீர்கள். தனிப்பட்ட விஷயங்களைப் பொது இடங்களில் கூறுவதற்கு முன் நீங்கள் மிகவும் கவனமாக இருப்பீர்கள்.

## *பிரச்சனைகளைத் தீர்க்காமல் தவறுகளைச் சுட்டிக்காட்டுதல்*

ஜனங்கள் தவறு செய்கிறார்கள். ஒரு சமுதாயத்தில் கூட, ஏதோ ஒரு இடத்தில் யாரோ ஒருவர் தவறு செய்திருப்பதால்-ஏதாவது தவறு செய்திருக்கலாம் அல்லது ஒரு விஷயத்தைத் தவறாகக் கையாண்டிருக்கலாம் என்பதால் முரண்பாடுகள் எழும்பும். பொதுவாக நடக்கும் காரியம் என்னவென்றால், பாதிக்கப்பட்ட நபர் ஜனங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றி சுற்றும் முற்றும் உள்ளவர்களிடம் பேசுகிறார், அறிந்தோ அல்லது அறியாமலோ, அது "அவதூறு பிரச்சாரமாக" மாறி, தவறு செய்த நபரின் பெயரைக் கெடுத்துவிடுகிறது. அநேக ஜனங்கள் தகவல்களைப் பரப்பத் தொடங்கும்போது அது புறங்கூறுதலாக மாறுகிறது. இவையனைத்தும் சமூகத்தில் பிரிவினையையும், சண்டை சச்சரவுகளையும் தீர்க்காமல், பிரச்சனையை அதிகப்படுத்தி விடுகிறது. மறுபுறம், இதுபோன்ற சூழ்நிலைகளில் என்ன செய்ய வேண்டும் என்பதை வேதாகமம் நமக்குக் கற்பிக்கிறது.

**மத்தேயு** 18:15-17

15 **உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து, அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்.**

16 **அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ.**

17 **அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து, சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக.**

பிரச்சனையைத் தீர்க்காமல் ஜனங்களின் தவறுகளை பொது இடத்தில் சுட்டிக் காட்டுவதைவிட, வேதவாக்கியங்களின்படி செயல்பட்டு, மன்னிப்பு, செவ்வைபடுத்துதல் மற்றும் குணமடையச்செய்தல் போன்றவற்றை அவர்கள் வாழ்வில் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

ஒரு உள்ளூர் திருச்சபையின் சமூகத்தின் சூழலுக்காகச் சொல்லப்பட்ட பல விஷயங்கள் மற்ற சமூகங்களுக்கும் பொருந்தும்.

புறங்கூறுதலில் ஈடுபடும் சமூகம் இறுதியில் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும்.

**கலாத்தியர்** 5:15
**நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.**

## பணியிடத்தில் புறங்கூறுதல்

நம்மில் பலர் நம் வாழ்வின் பெரும் பகுதியைப் பணியிடத்தில் செலவிடுகிறோம். வாரத்தில் ஐந்து முதல் ஆறு நாட்கள் வரை நாம் வேலை செய்வதில் ஈடுபடுகிறோம், ஒவ்வொரு வாரமும் காற்பங்கு நேரத்தை நமது பணியிடங்களில் செலவிடுகிறோம். துரதிர்ஷ்டவசமாக, பணி செய்யும் இடத்தில் பலரும் புறங்கூறுதல், புறணிபேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல் அல்லது கோள் சொல்லுதல் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். தங்களது முதலாளியைப் பற்றியோ, தங்களது சக ஊழியர்களைப் பற்றியோ அல்லது தங்களோடு பணிபுரியும் மற்றவர்களைப் பற்றியோ அவர்கள் இவ்வாறு புறங்கூறக் கூடும். ஒருவரது நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் அவர் செய்ததைப் பற்றித் தங்கள் சக ஊழியர்களிடம் பேசுவதன் மூலம் அவர்கள் புறங்கூறுதலில் ஈடுபடுகிறார்கள்.

பணியிடப் புறங்கூறுதல்கள் ஆரோக்கியமற்ற பணிச்சூழலை ஏற்படுத்துகின்றன. அது ஜனங்களை உணர்வு ரீதியாக பாதிக்கிறது, இதனால் தனிப்பட்ட நபரின் செயல்திறன் அல்லது குழுவின் செயல்திறன் பாதிக்கப்படுகிறது. இறுதியில், பணி செய்யும் சூழல் மிகவும் வெறுக்கத்தக்கதாக மாறுகிறது, பெரும்பாலும் நல்லவர்களாக இருப்பவர்கள், அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களில் வேலைக்குச் செல்கிறார்கள். ஊதியம் போதுமானதாக இல்லை என்ற காரணத்தினாலோ அல்லது வேலை உற்சாகமானதாக இல்லாததாலோ அல்ல, மாறாக, பெரும்பாலும் புறங்கூறி வதந்திகளைப் பரப்பும் ஒரு சிலரால் பணிச்சூழல் மனக் குழப்பத்திற்கு உள்ளாகிறது. தங்கள் வேலையில் கவனம் செலுத்த விரும்பும் நல்லவர்கள், புறங்கூறித் திரிவதற்கும், வதந்திகளைப்

பரப்புவதற்கும் தங்கள் நேரத்தையும் ஆற்றலையும் செலவிட விரும்ப மாட்டார்கள். அதைவிடச் சிறந்த விஷயங்களை அவர்கள் செய்ய வேண்டியுள்ளன!

## சமூக ஊடக வதந்திகள்

சமூக ஊடகங்களும் வதந்திகளைப் பரப்புவதற்கான மிக விரைவான வழியை வழங்கியுள்ளன. ஒரு சில நிமிடங்களில், தீங்கு விளைவிக்கும் புறங்கூறுதல் மற்றும் வதந்திகள் ஒரேயொரு பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம் ஆன்லைனில் வேகமாகப் பரவிவிடும். ஆன்லைனில் பதிவிடப்பட்ட ஒரு கட்டுரை மூலம் ஒரு தனிநபரின் நற்பெயரைக் கெடுத்துவிடலாம்.

### சிந்தனைக்கு

1) நீங்கள் சமூகம், பணியிடம் அல்லது சமூக ஊடகத்தின் வதந்திகளால் பாதிக்கப்பட்டிருக்கிறீர்களா?

- இதனால் நீங்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டீர்கள்?
- அப்படியானால் அதை எப்படிக் கையாண்டீர்கள்?
- அதை மீண்டும் சிந்தித்துப் பார்க்கும்போது, நீங்கள் நிலைமையை வித்தியாசமாகக் கையாண்டிருந்திருக்க முடியுமா?

# 3

# புறங்கூறுதலின் எதிர்மறையான விளைவுகள்

புறங்கூறுதலானது வேறு சில வன்முறைச் செயல்களைப் போல ஒரு கொடிய குற்றமாகத் தெரியவில்லை என்றாலும், வதந்திகள் நமக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படுத்தும் கடுமையான எதிர்மறையான தாக்கத்தை நம்மில் பலரும் உணர்வதில்லை. புறங்கூறுதலின் சில எதிர்மறையான விளைவுகளை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தாலும், இந்த அத்தியாயத்தில் இன்னும் சிலவற்றைக் காண்போம்.

## புறங்கூறுதல்கள் பயனற்றவை மற்றும் நமது நேரத்தை வீணடிக்கும்

சில நேரங்களில், புறங்கூறுதலில் ஈடுபடும் நபர்களுடன் செலவிடும் நேரம் மணிக்கணக்கில் செல்லலாம். அதனால்தான் இது "வீண் பேச்சு" என்று அழைக்கப்படுகிறது. இது முற்றிலும் பயனற்றது. நேரத்தை வீணடிப்பது மட்டுமல்லாமல், பெரும்பாலும் புறங்கூறுதலில் ஈடுபடுபவர்கள் அதிக உணர்ச்சிவசப்பட்டு ஆற்றலை இழந்துவிடுகிறார்கள், அதே போல் அதன் முடிவில் சோர்வடைந்துவிட்டதாக உணர்கிறார்கள்.

சில நேரங்களில், குறிப்பாக கடினமான நேரங்களைக் கடந்துசெல்லும்போது, ஜனங்கள் "மனதில் உள்ளவற்றைக் கொட்டிவிடுதல்" அல்லது ஒருவரின் உணர்ச்சிகளைப் பகிர்ந்துகொள்ளுதல் போன்றவற்றிற்கான ஒரு சிகிச்சை நடவடிக்கையாக புறங்கூறுதலில் ஈடுபடுகின்றனர். அதே சமயத்தில், வெளிப்படையாகப் பேசுதல் மற்றும் ஒருவருடைய சவால்களைப் பகிர்ந்துகொள்ளுதல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை நாங்கள் அங்கீகரிக்கிறோம், இது சரியான நபர்களுடன் பேசுவதன் மூலமும் ஆரோக்கியமான முறையில் மற்றொரு நபரைக் காயப்படுத்தாமல், பிரச்சினைக்கான தீர்வை நோக்கி செயல்படுவதன் மூலமும் செய்யப்பட வேண்டும்.

## ஒரு நபரின் நற்பெயர் கெடுக்கப்படுவதாலும் அவர்களின் குணாதிசயங்கள் நாசம்பண்ணப்படுவதாலும் புறங்கூறுதல் நம்பிக்கையைக் குழைத்துப்போடுகிறது

புறங்கூறுதலுக்கு உள்ளான நபர் "நாசம்பண்ணப்படுகையில்" தன்னைப் பற்றிய விளக்கத்தைக் கொடுக்க வாய்ப்பில்லை, மேலும் அவரது நற்பெயர் அழிக்கப்படுகிறது. ஒரு நபரைப் பற்றிய தவறான தகவலைக்கேட்கும்நபர்கள், உடனடியாகஅவரது குணாதிசயத்தைப் பற்றிய முடிவுக்கு வந்துவிடுகிறார்கள், மற்றும் அந்த நபரைக் குறித்துத் தவறாக மதிப்பிட்டு, அவர் மீதான நம்பிக்கையை அவர்கள் இழக்க நேரிடலாம். வதந்திகள் மூலம் தவறான தகவல் வழங்கப்பட்டதால், அந்த நபர் இப்படிப்பட்டவர்தான் என்ற தவறான பிம்பத்தை சித்தரித்துவிடுகிறார்கள்.

**நீதிமொழிகள்** 11:13

**செம்மையானவர்களுடைய உத்தமம் அவர்களை நடத்தும்: துரோகிகளின் மாறுபாடோ அவர்களைப் பாழாக்கும்.**

நீங்கள் உண்மையுள்ள நண்பராக இருக்கும்போது, உங்கள் நண்பர் பக்கமாக நிற்க முற்படுவீர்கள், மற்றும் அவரை இழிவுபடுத்தும்படியோ அல்லது அழிக்கும்படியோ அவரது தோல்விகளை வெளிப்படுத்த மாட்டீர்கள்.

சிலநேரங்களில், முதல்முறையாக ஒருவரைச்சந்திக்கும்போது, அவர்கள் உங்களைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டதாகத் தெரிகிறது, துரதிர்ஷ்டவசமாக, அவர்கள் கேள்விப்பட்டவை அனைத்தும் எதிர்மறையானவையாக இருந்தால், அது உங்களுக்கு அதிர்ச்சி அளிக்கலாம். நீங்கள் அங்கு செல்வதற்கு முன்பே வதந்திகள் உங்களுக்கு முன்பாகப் பயணித்துச் சென்று உங்கள் பெயருக்குக் களங்கத்தையும் சேதத்தையும் கொண்டுவந்ததாகத் தெரிகிறது. பின்னர், அந்த நபர் உங்களை உண்மையிலேயே அறிந்துகொள்ளவும், நீங்கள் உண்மையில் யார் என்பதைப் பற்றிய புதிய மதிப்பீட்டை மேற்கொள்ளவும் உதவும் மிகப்பெரிய பணியை நீங்கள் எதிர்கொள்கிறீர்கள். சில நேரங்களில், இதற்காக வேலை செய்ய வேண்டுமே என்ற எண்ணம் உங்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்தும்.

## புறங்கூறுதல் ஜனங்களை உணர்வு ரீதியிலாக பாதிக்கிறது

காட்டுத்தீ போல பரவும் வதந்திகளால் பரவுகிற தவறான தகவல்கள், ஜனங்களைக் கவலையடையச் செய்யும் அளவிற்கு உணர்வுகளைத் தாக்கி, அவர்களுக்கு மனஉளைச்சலை ஏற்படுத்தும்.

**நீதிமொழிகள்** 25:18
**பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லுகிற மனுஷன் தண்டாயுதத்துக்கும் கட்கத்துக்கும் கூர்மையான அம்புக்கும் ஒப்பானவன்.**

உதாரணமாக, எது உண்மை எது பொய் என்ற தெளிவான தகவல் இல்லாமல் வதந்திகள் பரவுவதால் பணியிடத்தில் வேலை செய்யும் ஊழியர்கள் மனச்சோர்வடையக் கூடும். இது ஆரோக்கியமற்ற பணிச்சூழலை உருவாக்குகிறது மற்றும் நல்ல ஊழியர்கள் வெளியேற விரும்புவார்கள்.

இதேபோல், ஒரு திருச்சபை சமூகத்தில், விசுவாசிகள் புறங்கூறுதல், புறணி பேசுதல், அவதூறு செய்தல் மற்றும் கோள் சொல்லுதல் போன்றவற்றில் ஈடுபட்டால், அது புதிய உறுப்பினர்களை அத்தகைய சமூகத்தின் ஒரு பகுதியினராக இருக்க விருப்பமில்லாதவர்களாக மாற்றுகிறது, மற்றும் அவர்கள் கூடிவருவதை விட்டுவிடவோ அல்லது அங்கிருந்து வெளியேறிவிடவோ முனைகிறார்கள்.

நேரடியாகவோ அல்லது இணையவழியிலோ வதந்திகள் மூலம் தனிநபர்களை அவமானப்படுத்துவது ஒருவரின் தனிப்பட்ட நற்பெயரை கிட்டத்தட்ட உடனடியாக சேதப்படுத்திவிடும். ஜனங்கள் தங்கள் நற்பெயரையும் கண்ணியத்தையும் இழக்கிறார்கள், மற்றும் வதந்திகள் மற்றும் அவதூறுகளின் இரக்கமற்ற செயலால் அதிகப்படியான உணர்வு ரீதியான அதிர்ச்சிகளுக்கு ஆளாகிறார்கள்.

இளைஞர்கள் மீதும், வதந்திகளின் உணர்வு ரீதியிலான தாக்கத்தின் தீவிரத்தன்மையைக் கவனியுங்கள். இன்றைய காலகட்டத்தில், இளைஞர்கள் நண்பர்கள் அல்லது பள்ளித் தோழர்களால் சமூக ஊடகங்கள் மூலம் இணையதளம் வழியாக "கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்", ஒரு சிலர், அந்த நபர் தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்கு கூட வதந்திகளைப் பரப்பி அவதூறாகப் பேசுகிறார்கள். இது "சைபர்புல்லிங்" என்ற வார்த்தையின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது, இது

மற்றொரு நபரைத் துன்புறுத்துவதற்கும், அச்சுறுத்துவதற்கும், சங்கடப்படுத்துவதற்கும் அல்லது குறிவைத்துத் தாக்குவதற்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாகும், மேலும் இது மோசமான ஒரு விஷயமாகும். [இளைஞர்களை வைத்திருக்கும் பெற்றோருக்கான பயனுள்ள தளம்—http://cyberbullying.us/].

## புறங்கூறுதல் உறவுகளை அழிக்கிறது

புறங்கூறுதல், அவதூறு செய்தல் மற்றும் பிறரைப் பற்றிய தவறான தகவல்களைப் பரப்புதல் ஆகியவை பெரும்பாலும் உறவுகள் முறிந்துவிடக் காரணமாக அமைகிறது. ஜனங்கள் தாங்கள் கேள்விப்பட்ட பொய்யை நம்பும்போது, அவர்கள் காயப்படுகிறார்கள். கோபம் மற்றும் தவறான எண்ணம் போன்ற உணர்வுகள் உருவாகிறது, நல்ல உறவுகளை இழந்துவிடுகிறார்கள்.

வேதாகமம் கூறுவதைக் கவனியுங்கள்.

**நீதிமொழிகள்** 16:28
**மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான்: கோள் சொல்லுகிறவன் பிராண சிநேகிதரையும் பிரித்துவிடுகிறான்.**

**நீதிமொழிகள்** 25:23 (OTV)
**வடகாற்று மழையையும், புறங்கூறுகிற நாவு கோபமுகத்தையும் பிறப்பிக்கும்.**

**நீதிமொழிகள்** 26:20
**விறகில்லாமல் நெருப்பு அவியும், கோள்சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்.**

புறங்கூறுதல் எனும் சிறிய விதைகளால், அவநம்பிக்கை மற்றும் சண்டை சச்சரவுகள் விதைக்கப்படுவதால், அது மிக நெருக்கமான நண்பர்களைக் கூட பிரித்துவிடக் காரணமாகிறது. உறவுகள் நாசமடைகின்றன. வதந்திகள் தவறான உணர்வுகளையும் கெட்ட எண்ணங்களையும் தூண்டுகிறது. தங்கள் வழிகளில் பிரிந்து செல்ல வேண்டிய கட்டாயத்தினால், ஜனங்கள் பிரிந்துள்ளனர். இது பணியிடத்திலோ அல்லது எந்த ஒரு சமூகத்திலோ நிகழலாம். சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பேண, வதந்திகள் நிறுத்தப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

## சிந்தனைக்கு

1) உங்களுக்குத் தெரிந்த வதந்திகளின் வேறு சில எதிர்மறையான விளைவுகள் யாவை?

2) வதந்திகள் ஜனங்களை உணர்வு ரீதியாக பாதித்ததாக நீங்கள் உணர்ந்த யதார்த்த வாழ்க்கைச் சூழ்நிலைகள் ஏதேனும் உள்ளனவா? அதன் முடிவு என்னவாக இருந்தது?

3) வதந்திகள் உறவுகளை அழித்த நிஜ வாழ்க்கை சூழ்நிலைகள் ஏதேனும் உள்ளனவா? அதன் முடிவு என்னவாக இருந்தது? ஜனங்களால் சமரசம் செய்துகொள்ளவும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் முடிந்ததா? அப்படியானால், அவர்கள் அதை எப்படிச் செய்தார்கள்?

# 4

# புறங்கூறுதலுக்கு எதிரான தேவனுடைய தீவிர நிலைப்பாடு

புறங்கூறுதல், புறணி பேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல் மற்றும் கோள் சொல்லுதல் ஆகியன பற்றி நாம் ஏற்கனவே வேத வாக்கியங்களில் பார்த்ததைத் தவிர, புறங்கூறுதல் பற்றி வேதாகமத்தில் தேவன் செய்த சில கடுமையான கண்டனங்களையும் நாம் கருத்தில் கொள்வோம்.

தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்த பத்துக் கட்டளைகளில் ஒன்று,

**யாத்திராகமம்** 20:16
**“பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக."**

இதன் பொருள், நீங்கள் உங்கள் அண்டை வீட்டாரைப் பற்றி பொய் பேசவோ, தவறாக சித்தரிக்கவோ அல்லது தவறான தகவல்களைப் பரப்பவோ கூடாது என்பதாகும்.

அவதூறுகளில் ஈடுபடுகிற தம்முடைய ஜனங்களை தேவன் கடிந்துகொள்கிறார், மற்றும் காரியங்களை திருத்தியமைக்கவும் சீரமைக்கவும் தாம் முன்வருவதாக எச்சரிக்கிறார்.

**சங்கீதம்** 50:19-21
19 **உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது.**

20 **நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு அவதூறு உண்டாக்குகிறாய்.**

21 **இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய், ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன்.**

பொய் சாட்சிக்காரராக இருப்பதும், பிறரைப் பற்றிப் பொய் சொல்வதும், சகோதரர்களிடையே கருத்து வேறுபாடுகளை விதைப்பதும் தேவன் அருவருக்கிற காரியங்களில் சில காரியங்களாக இருக்கின்றன.

**நீதிமொழிகள்** 6:16-19

[16] **ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள்.**

[17] **அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை,**

[18] **துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால்,**

[19] **அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே.**

நாம் முன்பு பார்த்ததுபோல், வதந்திகள் மற்றும் அவதூறுகள்தான் ஜனங்களிடையே கருத்து வேறுபாடு அல்லது ஒற்றுமையின்மையை விதைக்கும் வழிகளில் ஒன்றாகும். இது தேவன் வெறுக்கும் ஒரு காரியமாகும்.

அவதூறு செய்பவன் மதிகேடன் என்று அழைக்கப்படுகிறான். அப்படியானால், வதந்திகளில் ஈடுபடுவது முட்டாள்தனமான விஷயமாகும்.

**நீதிமொழிகள்** 10:18
**பகையை மறைக்கிறவன் பொய் உதடன்: புறங்கூறுகிறவன் மதிகேடன்.**

ரோமர் 1:28-32வது வசனங்களில், கொலை, வேசித்தனம் போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிற அதே பட்டியல் புறங்கூறுதல் மற்றும் அவதூறு செய்தல் ஆகியவற்றையும் பட்டியலிடுகிறது.

**ரோமர்** 1:28-32

[28] **தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்.**

[29] **அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய்,**

**[30] புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய்,**

**[31] உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்.**

**[32] இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள்.**

*“இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்”* என்ற எச்சரிக்கையில் புறங்கூறுபவர்களும் அவதூறு செய்பவர்களும் உள்ளடங்குவர். புறங்கூறுதலுக்கு எதிரான தேவனுடைய ஆணித்தரமான நிலைப்பாடு இதுதான். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், புறங்கூறுவது பாவமாகும். தேவனுக்கு முன்பாக இது ஒரு குற்றமாகும்.

சாராம்சத்தில், புறங்கூறுதல், புறணி பேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல் மற்றும் கோள் சொல்லுதல் போன்ற காரியங்களில் நாம் கண்டிப்பாக ஈடுபடக் கூடாது.

## சிந்தனைக்கு

1) புறங்கூறுதல், புறணி பேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல், கோள் சொல்லுதல் முதலிய பாவங்களைப் பற்றி வேதாகமத்தில் தெளிவாகக் கூறப்பட்டிருப்பினும், விசுவாசிகள் இன்னும் ஏன் இவைகளைச் செய்கிறார்கள் மற்றும் பங்கேற்கிறார்கள்?

# 5
# புறங்கூறுதலை எப்படிக் கையாளுகிறீர்கள்?

நம்மைச் சுற்றியுள்ளவர்கள் புறங்கூறி, அவதூறுகள் செய்து, புறணி பேசி வதந்திகளைப் பரப்பத் தொடங்கும் சூழ்நிலைகளில் நாம் இருப்போமானால் என்ன செய்வது? இதுபோன்ற செயல்களுக்கு நாம் பலியானால் என்ன செய்வது? நம்மைப் பற்றிப் பரப்பப்படும் தவறான தகவல்களினால் ஏற்பட்ட அவப்பெயர், உணர்வுப் பூர்வமான காயம் மற்றும் மற்ற விளைவுகளின்போது, எப்படி நடந்துகொள்வது மற்றும் அதை எவ்வாறு கையாள்வது?

## வதந்திகள் உங்களை மேற்கொள்ள விடாதீர்கள்

முதலில், எந்த வகையிலும் புறங்கூறுதலில் ஈடுபடவோ அல்லது பங்கேற்கவோ மாட்டோம், இவ்வளவு கீழ்த்தரமான உரையாடல் மற்றும் செயல்பாடுகளைச் செய்யும் அளவிற்கு நாங்கள் தரமிறங்கமாட்டோம், ஜனங்கள் புறங்கூறும் இடங்களிலும் சூழ்நிலைகளிலும் நாங்கள் ஏதேட்சியாக இருப்பதைக் காணும்போது கூட, அதில் பங்கேற்க மாட்டோம், வதந்திகளில் ஈடுபட மாட்டோம் என்ற ஒரு உறுதியான தீர்மானத்தை நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் எடுக்க வேண்டும் மற்றும் ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

**சங்கீதம்** 34:13
**உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள்.**

**சங்கீதம்** 39:1
**என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்.**

**சங்கீதம்** 139:4
**என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.**

நம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டு, தேவனுக்கு எதிராகப் பாவம் செய்ய நாம் மறுத்துவிடுவோம். நாம் இரகசியமாகப் பேசினாலும், நம் வதந்திகளை தேவனிடத்திலிருந்து மறைக்க முடியாது என்பது நமக்குத் தெரியும்!

ஒருவரது முகத்திற்கு முன்னால் சொல்ல முடியாத எதையும் அவரது முதுகுக்குப் பின்னால் சொல்லாதீர்கள். அவர்கள் இல்லாத நேரத்தில் நீங்கள் அவர்களைப் பற்றி எப்படிப் பேசுவீர்களோ, அதேபோல அவர்கள் முன்னிலையிலும் பேச வேண்டும்.

உங்கள் இருதயத்தை சுத்தமாக வைத்திருங்கள் மற்றும் யாரிடமும் குற்றமனப்பான்மையையோ அல்லது கசப்பான உணர்வையோ கொண்டிருக்க வேண்டாம். எப்போதும் அன்பில் நடப்பதையே நோக்கமாகக் கொண்டிருங்கள். இப்படிச் செய்வதால், நீங்கள் ஜனங்களை இழிவுபடுத்தவோ, அவர்களுக்குத் தீங்கு செய்யவோ அல்லது அவர்களை அழிக்கவோ அவர்களைப் பற்றித் தீமையானதைப் பேசவோ மாட்டீர்கள்.

**மத்தேயு** 15:19
**எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டுவரும்.**

**ரோமர்** 13:9
**எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது.**

பழிவாங்க வேண்டாம். வதந்திகளைப் பரப்புவதன் மூலம் உங்களால் வதந்திகளை வென்றுவிட முடியாது.

## கூடுமானால், அன்புடன் எதிர்கொள்ளுங்கள்

கூடுமானால், வதந்தி மற்றும் தவறான தகவல்களைப் பரப்பத் தொடங்கியவர் அல்லது புறங்கூறுதலில் ஈடுபடும் நபர்களிடம் குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிப் பேசுங்கள். வதந்திகளைப் பரப்புவதன் மூலம் ஏற்பட்ட தீங்கைக் காண அவர்களுக்கு அன்புடன் உதவுங்கள். மேலும் வதந்திகளைப் பரப்ப இடமளிக்காமல் நேரடியாக சம்பந்தப்பட்ட நபரிடம் (நபர்களிடம்)

இந்த விஷயத்தைப் பற்றிப் பேசி, உண்மையான பிரச்சனையை எதிர்கொள்ள அவர்களை ஊக்குவிக்கவும்.

## அது செத்து மடியட்டும்

வதந்திகளை மேலும் தூண்டிவிட வேண்டாம். வதந்திகள் அழிய அனுமதியுங்கள். அத்தகைய சூழ்நிலைகளில் குறைவாகச் சொல்வதே சிறந்தது. அநேகர் அதில் பங்கேற்க மறுப்பதால், கதை இறுதியில் ஒன்றுமில்லாமற்போய்விடும்.

கூடுமானால், அந்தத் தனிநபர் அல்லது சூழ்நிலையைப் பற்றிய நேர்மறையான விஷயங்களைப் பேசுவதன் மூலம் வதந்திகளை எதிர்த்துப் போராடுவதைத் தேர்ந்தெடுக்கவும். விஷயங்களின் சிறந்த பக்கத்தைப் பார்க்க ஜனங்களுக்கு உதவுங்கள். புறங்கூறுதல் மற்றும் வதந்திகள் பாதி உண்மைகள், முழுமையடையாத தகவல் அல்லது தவறான தகவல் ஆகியவற்றின் அடிப்படையிலானவை. எனவே, விஷயங்களின் சிறந்த பக்கத்தைப் பற்றிப் பேசுவதன் மூலம், பரப்பப்படும் அரைகுறை உண்மைகளை நாம் எதிர்க்கிறோம்.

## ஜெபி, மன்னித்து விடு மற்றும் விடுவி

நீங்கள் அவதூறு மற்றும் வதந்திகளால் பாதிக்கப்பட்டிருந்தால், ஜெபம் செய்யுங்கள். கர்த்தர் உங்களைப் பாதுகாக்கும்படி வருவார்.

**சங்கீதம்** 31:13-16

13 **அநேகர் சொல்லும் அவதூறைக்கேட்டேன், எனக்கு விரோதமாக அவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்து கொண்டது, என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள்.**

14 **நானோ, கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன், நீரே என் தேவன் என்று சொன்னேன்.**

15 **என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது, என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.**

16 **நீர் உமது முகத்தை உமது ஊழியக்காரன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உமது கிருபையினாலே என்னை இரட்சியும்.**

ஜனங்கள் உங்களைப் பற்றிப் புறங்கூறும்போதும், உங்களைப் பற்றி வதந்திகளைப் பரப்பும்போதும், அது வேதனை அளிக்கிறது. இது வேதனையானது. உங்கள் வலி மற்றும் வேதனை உணர்வுகளை ஜெபத்தில் தேவனிடத்தில் வைத்துவிடுங்கள். அந்த விஷயத்தைப்

பற்றி தேவனிடத்தில் பேசுங்கள். உங்கள் இருதயத்தையும் உணர்வுகளையும் அவரிடம் ஊற்றிவிடுங்கள்.

இதைச் செய்கிறவர்களுக்கு மன்னிப்பை அளித்துவிடுங்கள். அவர்கள் என்ன செய்தாலும் பரவாயில்லை, அவர்களை நேசிப்பதைத் தேர்ந்தெடுங்கள். அவர்கள் செய்கிற செயல்களுக்குப் பின்னால் துரோகம், பழிவாங்குதல் மற்றும் பிற தவறான நோக்கங்கள் இருக்கலாம். ஆனால் நீங்கள் இன்னும் தேவனுடைய அன்புடன் அவர்களை நேசிக்க முடிவு செய்கிறீர்கள். நீங்கள் இன்னும் அவர்களை மன்னித்து விடுவிப்பதைத் தேர்ந்தெடுக்கிறீர்கள், மேலும் உங்கள் பாதுகாப்பு மற்றும் நியாயத்திற்காக தேவனை நோக்கிப் பாருங்கள். *"எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்"* (லூக்கா 6:27,28).

## நமது சமூகத்தை வதந்திகள் இல்லாத பகுதியாக மாற்றுவோம்

புறங்கூறுதல், புறணி பேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல், கோள் சொல்லுதல் போன்றவற்றில் நாம் சகிப்புத்தன்மை இல்லாத ஜனங்கள் சமூகமாக இருப்போம். புறங்கூறுதல், புறணி பேசுதல், அவதூறு செய்தல், முதுகில் குத்துதல், கோள் சொல்லுதல்- இவையெல்லாம் நம்மிடையே இருக்காது! புறங்கூறுதல் என்பது தேவனுடைய அழகிய தோட்டமான திருச்சபையைத் தொந்தரவு செய்து நெறித்துப்போடும் களையாக இருக்கிறது. அவரது தோட்டத்தைக் களைகள் இல்லாமல் வைத்திருக்கும் ஒரு கலாச்சாரத்தை உருவாக்குவோம் மற்றும் சுய ஒழுக்கத்தை வளர்ப்போம்.

### சிந்தனைக்கு

1) வதந்திகள், அவதூறுகள் மற்றும் புறணி பேசுதல் போன்றவற்றை நீங்கள் மேற்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட சூழ்நிலையை(சூழ்நிலைகள்) தற்போது நீங்கள் எதிர்கொள்கிறீர்களா? உங்கள் சூழ்நிலையை (சூழ்நிலைகளை) சமாளிக்க நீங்கள் செய்யக்கூடிய சில விஷயங்கள் என்னென்ன?

## ௬
# ஜெபம்

### அறிக்கையிட்டு மனந்திரும்புதலுக்கான ஜெபம்

*பரலோகத்திலுள்ள எங்கள் அன்பின் பிதாவே, நான் என் பேச்சில் கவனமாய் இருக்கவில்லை என்பதை அறிக்கையிடுகிறேன். நான் அறிந்தும், சில நேரங்களில் அறியாமலும் புறங்கூறியிருக்கிறேன், அவதூறாகப் பேசியிருக்கிறேன் மற்றும் மற்றவர்களைக் குறித்துத் தவறாகப் பேசியிருக்கிறேன். வதந்திகளைப் பரப்பி ஜனங்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவித்ததற்காக நான் குற்ற உணர்வடைகிறேன். நான் என் தவறுதலை விட்டு மனந்திரும்புகிறேன், மற்றும் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் என் பாவத்தை மன்னித்து என்னை சுத்திகரிக்குமாறு உம்மிடம் கேட்டுக்கொள்கிறேன். புறங்கூறித்திரியும் இந்த வாழ்க்கை முறையை நான் விட்டுவிடுகிறேன். அதோடு கூட, நான் தொடர்ந்து புறங்கூறாமலும், அவதூறு செய்யாமலும் மற்றும் பிறரைப் பற்றித் தவறாகப் பேசாமலும் இருக்கும்படி, தயவுசெய்து என் நாவிற்குக் காவல் வைப்பீராக. நீர் இதைச் செய்ததற்காக நான் உமக்கு நன்றி கூறுகிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.*

### கடந்த காலத்தில் வதந்திகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஜெபத்தை ஏறெடுத்தல்

*அன்பின் பிதாவே, நீர் என்னை நேசித்து, என்னைக் கவனித்துக்கொள்கிறீர் என்பதை நான் அறிந்திருப்பதால், நான் என் இருதயத்தை உம்மிடம் ஊற்றிவிடுகிறேன். என் உள்ளத்தின் ஆழத்தில் உள்ள எண்ணங்களையும் உணர்வுகளையும் நீர் அறிவீர். (ஜனங்கள் அல்லது சூழ்நிலையை பெயரிடுங்கள்) இவர்களால் என்னைப் பற்றி பரப்பப்பட்ட வதந்திகள், அவதூறுகள் மற்றும் தவறான பொய்கள் நிமித்தமாக நான் மிகுந்த காயமும் வேதனையும் அடைந்தேன் என்பது உமக்குத் தெரியும். நான் என் காயத்தையும் உணர்ச்சிகளையும் உம்மிடம் கொண்டுவந்து வைக்கிறேன், நீர் என் வலியை ஆற்றுமாறு உம்மிடம் கேட்டுக்கொள்கிறேன். கர்த்தாவே,*

*என் உணர்ச்சிகளையும் என் நினைவுகளையும் குணப்படுத்துவீராக. பரிசுத்த ஆவியானவரின் பலத்தினாலும், அன்புகூரும்படிக்கு அவர் எனக்கு அளித்திருக்கிற வல்லமையினாலும், என்னைக் காயப்படுத்தியவர்களுக்கு நான் மன்னிப்பை வழங்குகிறேன். என் இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கும் தேவனுடைய அன்பை நான் அவர்களுக்கு வெளியிடுகிறேன். இந்த வதந்திகள், புறங்கூறுதல்கள் மற்றும் அவதூறுகளால் ஏற்பட்ட எல்லா சேதத்திலிருந்தும், நீர் என் சார்பாக தெய்வீக குறுக்கிடுதல் மூலமாக செயல்பட்டு, என் வாழ்க்கையை விடுவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். உமது தயவு மற்றும் கனத்தை எனக்குத் தந்து என் வாழ்வில் கிருபையருள்வீராக. உமது கரம் என்னை உயர்த்தட்டும். கர்த்தாவே, நீரே என் மகிமையும் என் தலையை உயர்த்துகிறவருமாய் இருக்கிறீர். கர்த்தாவே, நான் உம்மை நோக்கிப் பார்க்கிறேன், என் கண்கள் உம் மீது மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. பிதாவே, என் வாழ்க்கையில் நீர் செய்த செயல்களுக்காக நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.*

## வதந்திகள் நடக்கும் சூழ்நிலைகளுக்கு நடுவில் இருப்பவர்களுக்கான ஜெபம்

*அன்பின் பிதாவே, நீர் என்னை நேசித்து, என்னைக் கவனித்துக்கொள்கிறீர் என்பதை நான் அறிந்திருப்பதால், நான் என் இருதயத்தை உம்மிடம் ஊற்றிவிடுகிறேன். என் உள்ளத்தின் ஆழத்தில் உள்ள எண்ணங்களையும் உணர்வுகளையும் நீர் அறிவீர். (ஜனங்கள் அல்லது சூழ்நிலையைப் பெயரிடுங்கள்) இவர்களால் என்னைப் பற்றி பரப்பப்பட்ட வதந்திகள், அவதூறுகள் மற்றும் தவறான பொய்கள் நிமித்தமாக நான் மிகுந்த காயமும் வேதனையும் அடைந்தேன் என்பது உமக்குத் தெரியும். நான் என் காயத்தையும் உணர்ச்சிகளையும் உம்மிடம் கொண்டுவருகிறேன், நீர் என் வலியை ஆற்றுமாறு உம்மிடம் கேட்டுக்கொள்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் பலத்தினாலும், அன்பு கூரும்படிக்கு அவர் எனக்கு அளித்திருக்கிற வல்லமையினாலும், என்னைக் காயப்படுத்தியவர்களுக்கு நான் மன்னிப்பை வழங்குகிறேன். என் இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கும் தேவனுடைய அன்பை நான் அவர்களுக்கு வெளியிடுகிறேன். நீர் என் சார்பில் தெய்வீக குறுக்கிடுதல் மூலமாக செயல்பட்டு, இந்த வதந்திகள், புறங்கூறுதல்கள் மற்றும் அவதூறுகள் அனைத்தும் பரவாதபடி செய்து, உமது தயவால் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி நான்*

*வேண்டிக்கொள்கிறேன். என் வாழ்வில் கனத்தை அருளிச் செய்யும், உமது கரம் என்னை உயர்த்தட்டும். கர்த்தாவே, நான் உம்மை நோக்கிப் பார்க்கிறேன், என் கண்கள் உம் மீது மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. பிதாவே என் வாழ்க்கையில் நீர் செய்த செயல்களுக்காக நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்!*

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார். ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால்.

**அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை

சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, *"**பாவத்தின் சம்பளம்(கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்**"* (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்—உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது—அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***"... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்" (அப்போஸ்தலர் 10:43).***

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9).***

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக.*

*ஆமென்.*

# ஆல் பீப்பிள் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்** ஒரு திருச்சபையும், ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல

இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், கைதேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்துக்கு ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, apcwo.org/locations ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது contact@apcwo.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய apcwo.org/books என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு apcwo.org/sermons என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

| | |
|---|---|
| **இளம் பிராய நடத்தை** | **நடத்தையில் சீர்கேடு** |
| **பிறரோடு இணைக்கக் குறைபாடு** | **ஆளுமை குறைபாடு** |
| **உறவுமுறை சவால்கள்** | **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்** |
| **கல்வியில் பின்தங்கிய நிலை** | **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி** |
| **தொழில் தொடர்பான பிரச்சினைகள்** | **மது / போதைப்பொருளுக்கு அடிமை** |
| **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்** | **ஆவிக்குரிய போராட்டங்கள்** |
| **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்** | **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை** |

கிரிசலிஸ் கவுன்சிலிங் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**Website: chrysalislife.org**

**Phone:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998

**Email: counselor@chrysalislife.org**

கிறிசலிஸ் கவுன்சிலிங் என்பது ஆல் பீப்பிள் சர்ச் ரூ வோர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள் சர்ச்"க்கு காசோலை / வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
**IFSC குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC Bank, 7M/308 80 Feet Road, HRBR Layout, Kalyan Nagar, Bengaluru, 560043, Karnataka, India

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்*

*சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்தபோதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play







*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி

apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச் பைபிள் காலேஜில் (ஏ.பீ.சி-பி.சி) ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை,** இந்திய நேரப்படி **காலை** 9:00 **முதல் நண்பகல்** 12 **மணி வரை** (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

தனிநபர்கள், சமூகங்கள், பணிச்சூழல்கள் மற்றும் பிற சமூக அமைப்புகளின் மீது ஏற்படும் எதிர்மறையான தாக்கத்தை உணராமல், புறங்கூறுதல், பழிவாங்கல், அவதூறு செய்தல் மற்றும் முதுகில் குத்துதல் போன்ற காரியங்களில் ஜனங்கள் பொதுவாக ஈடுபடுகின்றனர். பெரும்பாலும் புறங்கூறுதல் என்று அழைக்கப்படும் ஒரு சிறிய காரியத்தால் மக்கள் காயப்படுத்தப்படுகிறார்கள், சமூகங்கள் சிதைந்துபோகின்றன, மற்றும் பணியிடத்தின் சூழல்கள் விரோதத்தால் நிறைந்ததாகவும் பலனற்றதாகவும் மாறுகின்றன. புறங்கூறுதல் என்பது ஒரு களையைப்போல வளரும் தன்மையுடையது, விரைவில் பிடுங்கி எறியப்படாவிட்டால், அது அழகுமிக்க தோட்டத்தை முற்றிலும் அழித்துவிடும்.

இந்த எளிய புத்தகமானது வதந்திகளைப் பற்றி வேத வாக்கியங்கள் போதிக்கிறவைகளை எடுத்துரைத்து நம்மை எச்சரிக்கிறது, இப்படிப்பட்ட வாழ்க்கை முறையிலிருந்து விடுபட உதவுகிறது, மற்றும் புறங்கூறுதலைக் கையாள்வதற்கான எளிய பயிற்சி வழிமுறைகளை நமக்கு வழங்குகிறது. ஸ்தாபனங்கள் ஆரோக்கியமான பணியிடச் சூழல்களை வளர்த்துக்கொள்ளவும், கல்வி நிறுவனங்கள் மாணவர்களுடனான தொடர்பை நட்புடனும் ஆதரவோடும் பேணவும், சமூகத்தில் உள்ள ஜனங்கள் ஒருவருக்கொருவர் அன்பு மற்றும் அக்கறையுடன் பழகுவதற்கும் இப்புத்தகம் ஏதோ ஒரு வகையில் உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

புறங்கூறுதல் நிறுத்தப்படட்டும்!

**All Peoples Church & World Outreach,**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org